பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 19 தை 24 ஸபர் 27 இதழ் 358
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-2-78

OF SRI LANKA RECEIVED 1978 -2- PERIODICALS DIVISION ... LIBRARY ...

இன்றே வாங்கி பாவியுங்கள்
LALA SOAP VPV
LALA SOAP INDUSTRY, ATCHUVELY.
லாலா
லாலா நீல சோப்
எல்லாக் கடைகளிலும் விற்பனையாகின்றது.
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி. தரன்-

## 'வாசு கைதாகி விடுதலை

(கொழும்பு)

திரு. வாசுதேவ நாணயக்காராவும் அவரது ஆதரவாளர்கள் சுமார் நாற்பது பேரும் நேற்றுமுன்தினம் கைதாகி பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கறுப்புக்கொடி காட்டிய குற்றத்தின் மீது இவர்கள் கைதுசெய்யப்பட்டனராம்.

திரு. 'வாசு' இரத்தின புரியிலும் மற்றவர்கள் நாட்டின் சில பகுதிகளிலும் கைதானார்களாம். (ம)

# "சகல மக்களுக்கும் பூரண சுதந்திரம்; நாடு பிளவுபடுவதை அனுமதிக்க முடியாது"

## ஜனாதிபதி ஜயவர்த்தன நாட்டுமக்களுக்குச் செய்தி

### "தன்மானத்துடன் சுதந்திரமாக வாழ பொருத்தமான சூழ்நிலை உருவாகியுள்ளது'

[கண்டி]

"இந்த நாடு எல்லோருக்குமே சொந்தமானது. இந்த நாட்டின் எந்தப் பிரஜையும், நாட்டின் எப்பகுதியிலும் பூரணசுதந்திரத்துடன் வாழ உரிமையுண்டு. இந்த நாட்டை பலநாடுகளாக பிரிக்கமுடியாது. எந்தக்கட்டத்திலும் எவ்விதச்சூழ்நிலையிலும் நாடுபிளவுபடுவதை அனுமதிக்கமுடியாது! சகல மக்களும் தன்மானத்துடன் சந்தோஷமாக சுதந்திரமாகவாழ்க்கையை நடத்த, தகுந்த பொருளாதாரச்சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கியத்தைப் பேணிப்பாதுகாத்து, ஒரு கொடியின்கீழ் செயல்பட மக்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்"

இவ்வாறு புதிய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று மாலை தலதாமாளிகையின் எண்கோணமண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்கு விடுத்த முதல்செய்தியில் தெரிவித்துள்ளார்.

"அரசியல்சாசனம் பேணிப் பாதுகாக்கப்படும். தேசத் தலைவன் என்ற முறையில் என்னிடம் ஒப்படைக்கப் பட்ட பொறுப்புகள் நிறைவேற்றப்படும்" என்றும் புதிய ஜனாதிபதி தமது உரையில் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக் குடியரசின் செயலதிகாரம்மிக்க ஜனாதிபதியாக நேற்றுமுன்தினம் பதவியேற்ற திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தமது உரையில் மேலும் கூறியதாவது.

### 6 மாதங்களுக்கு முன் இதே இடத்தில்...

"ஆறு மாதங்களுக்கு முன்னர் இதே இடத்தில் நான் உரையாற்றியபோது. இந்த நாட்டின் பிரதமராக வந்திருந்தேன். அடுத்த சில மாதங்களில் அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதை நாட்டுமக்களுக்கு அன்று எடுத்துரைத்தேன். இன்று ஆறு மாதங்களின் பின்னர் இங்கு மீண்டும் வந்திருக்கின்றேன். கடந்த ஆறு மாதங்களில் அரசாங்கம் என்ன செய்துவிட்டது என்பதையும், அடுத்து நிறைவேற்றப்போகும் வேலைத் திட்டங்களைப் பற்றியும் இங்கு சுருக்கமாக நான் கூறவேண்டியிருக்கிறது. இதற்கிடையே நாட்டில் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்களினால் அரசாங்கத்தின் பல திட்டங்கள் பின்னுக்குத்தள்ளப்பட்டுவிட்டன.

### அடிமைச்சட்டங்கள் அகற்றப்பட்டன

"நாட்டில் தலை தூக்கிய குழப்பங்கள் காரணமாக இரண்டுமாதகாலத் திட்டங்கள் நிறுத்தப்பட்டன. கோடிக்கணக்கான பணம் வீணாகச் செலவாகிவிட்டது. இக் குழப்பங்களைக் கட்டுப்படுத்த அவசரகாலச்சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் அப்படியான மிருகத்தனமான செயலில் அரசு இறங்கவில்லை.



"கடந்த ஆறு மாதங்களில்; மக்களை அடிமைப்படுத்திய பல அடிமைச்சட்டங்கள் சட்டக்கோவையிலிருந்து அகற்றப்பட்டன. மக்களுக்குச் சகல சுதந்திரங்களும் வழங்கப்படும் நிலையில் சட்டங்களில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. மாதக்கணக்கில் சிறையில் அடைத்து வைப்பதையும், நான்காவது மாடிக்கு இழுத்துச் செல்வதையும் தவிர்த்தோம். எவ்விதக் குற்றச்சாட்டுகளும் இல்லாமல், சிறைகளில் அடைத்து வைக்கப்பட்ட இளைஞர்களை விடுதலை செய்தோம்.

### ஜனநாயக நாடு

'இவ்விதமாக அரசு செயல்பட்டதன் மூலம், உலகிலேயே உண்மையான ஜனநாயக நாடு ஒன்று இருக்குமானால்அது இலங்கையாகத்தான் இருக்க முடியும் என்ற பெருமையைத் தேடிக்கொண்டது.

"மக்களுக்கு இன்றுள்ளபிரச்னைகள் இரண்டு என்று கூற

[6-ம் பக்கம் பார்க்க]

அமரர் ஜி. ஜி. நினைவுதினம்:

## யாழ். நகரில் கூட்டணி செய்துள்ள ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் முதலாவது நினைவு அஞ்சலிக் கூட்டம், இம்மாதம் 9ம் திகதி மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் தமிழர் விடுதலை கூட்டணியினால் நடாத்தப்படவிருக்கிறது.

அன்று காலை மத ஆலயங்களிலும், மதவழிபாடுகள் நடாத்த கூட்டணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு யாழ் கோட்டை முனியப்பர் கோவிலில் அமரர் ஜி. ஜி. நினைவாக அன்னதானம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு ஏ அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் அஞ்சலிக் கூட்டத்தில் வணபிதா சிங்கராயர் அமதி, ஜனாப் முகைதீன் பிச்சை, செந்தமிழர் இயக்க பொதுச்செயலாளர் திரு வி பொன்னம்பலம், சட்டத்தரணி ஜனாப் எஸ் எச் எம் சகித், சட்டத்தரணிகளான த சங்கரப்பிள்ளை, இ விஸ்வநாதன், ஆ யேசுதாஸன், எஸ் ரி ஆர் பிலிப்ஸ் அதிபர் திரு எஸ் தியாகராசா, திரு ஜே எஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

## சன்சோனிகமிஷன்விசாரணை நாளை மறுதினம் ஆரம்பம்

### சாட்சியமளிக்க விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையக் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 8-ம் திகதி முதல் ஆரம்பமாகவிருக்கும் 1977 ஆகஸ்ட் அசம்பாவிதங்கள் பற்றிய சன்சோனிக்கமிஷன் விசாரணைக்குச் சாட்சியங்களை ஆஜர்படுத்தும் நோக்கமாக சாட்சியங்களை கோவைப்படுத்தும் வேலையில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகச் சட்டத்தரணிகள் இன்று முதல் ஈடுபடுகின்றனர்.

நாட்டின் எந்தப்பகுதியிலாவது வாழ்ந்து வன்செயல்களால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் கமிஷன்முன் சாட்சியமளிக்க விரும்புபவர்கள் உடனே தங்களுடன்தொடர்பு கொள்ளுமாறு சட்டத்தரணி செ.ரவீந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதனையொட்டி மானிப்பாய் வீதியிலுள்ள சட்டத்தரணி செ. சோமசுந்தரத்தின் இல்லத்தில் தமிழ்அகதிகள் புனர்வாழ்வுக் கழகச்சட்டத்தரணிகள் இன்று முதல் காலை 9 மணிமுதல்சாட்சியமளிக்க விரும்பும் பொது மக்கள் சந்தித்துக்கலந்துரையாடலாம் என் அவர் தெரிவித்தார்.

சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியங்களைப் பின்வருமாறு ஆஜர் செய்வதற்கு தமிழகதிகள் புனர்வாழ்வுக்கழகம் ஒழுங்குகளைச் செய்துள்ளது.

### யாழ்ப்பாண சம்பவங்கள்

8ம், 9ம், 10ம், 11ம் திகதிகளில் கமிஷன்முன் யாழ்ப்பாணச் சம்பவங்கள் பற்றிய சாட்சியங்களை இக்கழகம் ஆஜர் செய்யவுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிதலிங்கம், கோப்பாய் தேசியபேரவை உறுப்பினர் திரு. சி. கதிர வேலுப்பிள்ளை, யாழ்ப்பாணத் தேசியபேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன்ஆகியோரும் மற்றும் இடம்பெயர்ந்த ஊழியர் சங்கத் தலைவர் டாக்டர் பாலசிங்கம், அகதிகள் புனர்வாழ்வுச் சபைத்தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா ஆகியோரின் சாட்சியங்களும் சட்டத்தரணிகளால் இத்தினங்களில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. அதனையடுத்து பொதுமக்களின் சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படும்.

### வவுனியாவில்

13, 14ம் திகதிகளில் வவுனியாவில் நடந்த சம்பவங்கள் பற்றிய சாட்சியங்கள் ஆஜராக்கப்படும்.

(6-ம் பக்கம் பார்க்க)

# "கல்லூரிகள் ஆற்றும் பெரும் சேவை"

(கொழும்பு)

"வாழ்க்கையிலும் சமூகத்திலும் பல்வேறினத்தவர்கள் இடையே நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தும் ஸ்தாபனங்களுள், கல்லூரிகள் முதலிடத்தை வகிக்கின்றன; அதிலும் விடுதி வசதியுடன் கூடிய கல்லூரிகளே இதற்கு பெருமளவில் கைகொடுத்து உதவுகின்றன. சென்னை நகருக்கு அப்பால் தாம்பரத்திலுள்ள சென்னை கிறீஸ்தவக் கல்லூரியும் இவ்விடயத்தில் பெரும் பங்களிப்பினை வகுத்துள்ளது."

இவ்வாறு அண்மையில் வெள்ளவத்தை பிறைட்டன் ஹோட்டலில் நடைபெற்ற சென்னை கிறீஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க இலங்கைக் கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் வரவேற்புரை நிகழ்த்திய திரு. தில்லையம்பலம் சிவயோகபதி கூறினார்.

சங்கத்தின் நிருவாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர், தலைவர்: திரு. து. மகேந்திரன், உப-தலைவர்கள்: லெப்டினன்ட் கேணல் கே. ஐ. எம். டீ. டீன், திரு த. சங்கரலிங்கம், செயலாளர்: திருமதி பி. செல்வரத்தினம், உதவிச்செயலாளர்: திரு. மோகன் திசவீரசிங்க, அங்கத்துவச்செயலாளர்: திரு. தி. சிவயோகபதி, பொருளாளர்: திரு. வி. விஸ்வநாதன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள்: எஸ். பி. சந்திரதாசசில்வா, ஸ்ரீ ரகுநாதன், என். நடராசன், தே. கந்தையா, கி. புவனச்சந்திரன், எம். வீ. பி. ரத்நாயக்கா, எஸ். தேவகோபிநாத், சி. டீ. ஆனந்தராஜன், அ. சந்திரராஜன்.


## இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் பயிற்சி நிலையம்,

**வகுப்புகள்:-** G.A.Q., G.S.Q., First in Commerce B. A., B.com.

**நடைபெறும் இடங்கள்:-** யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டுநகர்.

**தகைமைகள்:** (I) G. C. E. A/L நான்கு பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.
(II) 25 வயதிற்கு மேற்பட்டோர் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**புதிய வகுப்புகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 4-2-78.**

**விண்ணப்ப முடிவு திகதி: 10-2-78 வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

புதிதாக பதிய விரும்பும் மாணவர்கள் பாடங்கள் பற்றிய விபரத்தையும் பதிவு அனுமதிப் பத்திரத்தையும் முத்திரையிட்ட சுயமுகவரி கொண்ட 9" X 4" தபால் உறை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பர இல 1000.
C/o. ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.



## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாக மாவட்ட நீதிமன்றம்

இல: ஈடு/179

1. கந்தப்பிள்ளை ஆறுமுகம், மல்லாகம் (7-ம் கட்டையடி)

வாதி

எதிராக

1. முத்து இரத்தினசிங்கம், சுன்னாகம்.
2. முத்து இரத்தினசிங்கம் கைம்பெண் சிவமணி, சுன்னாகம். இவர் காலஞ்சென்ற முத்து இரத்தினசிங்கத்தின் சொத்துக்களின் சட்டப்பிரதிநிதியாக.

பிரதிவாதிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் 179-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணிக்குள் ஒரு கிணறும் வீடு கட்டுவதற்கு அத்திவாரமும் போடப்பட்ட காணியை 1978-ம் ஆண்டு மாசி மாதம் 27-ந் திகதி (27-2-78) திங்கட்கிழமை 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 6300. 17-6-74 தொடக்கம் 21-11-75 வரைக்கும் 5000/- வருடமொன்றுக்கு 12% வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை 5% வட்டியும் வழக்குச்செலவு 694-70 சதம். இதில் வழக்குச்செலவில் ஓர் பகுதிப் பணமாக கொடுக்கப்பட்ட ரூபா 150/- கழிபடல் வேண்டும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவிற் கோவிற்பற்று சுன்னாகம் இறை பிச்சிக் குடியிருப்பும், செருக்கன் அடைப்பும் கிணற்றடியும் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு 4ம் செய்பயிர் வான்பயிர்களும் வடக்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் எல்லை கிழக்கு கையொழுங்கை வடக்கு பொன்னுத்துரை பெண் சரஸ்வதிக்கும் செல்லத்துரை சற்குணத்துக்கும் உரிய ஆதனங்கள், மேற்கு பொன்னையா பெண் சின்னம்மாவுக்கும் முத்தர் பெண் மாணிக்கத்துக்கும் உரிய ஆதனங்கள், தெற்கு மாணிக்கம் பெண் வள்ளிப்பிள்ளையின் ஆதனம் இதடங்கலும் வடக்கே பேரொழுங்கைக்கு போக்குவரவு செய்யும் ஒழுங்கை பாவிப்புரித்தும்

மு. விஜயராஜன்,
நீதிமன்ற விற்பனை, விலைமதிப்பாளையாளர்.

கொக்குவில் மேற்கு.
கொக்குவில்.
30-1-78. 8424


[இன்று வித்துவான் பண்டிதமணி ந. சுப்பையபிள்ளையின் சபிண்டீகரண தினம்]

## தமிழ்மணியே மறவோம் எந்தாய்

அருளொழுகு திருவிழியும் அருந்தமிழை
மாணவர்கள் அள்ளி ஆரப்
பொருள்விரிக்கும் திருவாயும் புன்னகையின்
புதுப்பொழிவும் பொங்கும் அன்பால்
மருவுதமிழ் மகள்வாழ நாளெல்லாம்
தவம்பயிலும் மாண்பும் மேய
குருமணியே குணக்குன்றே சுப்பையக் கோமகனே
மறவேம் எந்தாய்.

தண்டமிழின் கடல்கடந்து வடமொழிநூல்
விதமுண்டு தகைமை சான்றே
எண்டிசையும் இலக்கணநூற் பெரும்புலவன்
இவன்போல்வார் இல்லை என்ன
மண்டுமிசை படைத்துடையாய் மறந்தேனும்
புகழ்விரும்பா மணியே சென்றாய்
கண்டுநிகர் கனிமொழியாய் சுப்பையக் கலையேறே
மறவேம் எந்தாய்.

கலைப்பொலிவால் கவின்மதிநீ கருதவரு
வாய்மையினால் ஞாயி றையா
விலையறியாக் கற்பகமே காட்சியினால்
பொதிகைமுனி விளம்பிற் பின்னும்
நிலமனைய தனிப்பொறையாய் நினையடைந்தார்க்
காரமிர்தாய் நின்றாய் சென்றாய்
தலைமகனே சுப்பைய தேசிகனே தமிழ்மணியே
மறவேம் எந்தாய்.

— க. மயில்வாகனன்

## "30 வருடமாகத் தமிழரை வழிநடத்தத் தலைவரில்லை"

[யாழ்ப்பாணம்]

"கடந்த 30 வருட காலமாகத் தமிழினத்தைச் சரியான பாதையில் வழி நடத்தக்கூடிய தலைவர்கள் இல்லாததினால் தமிழினம் பல கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியிருந்தது. இன்று மக்கள் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில், தமிழினத்தின் உரிமைகளைப் பெற்று வாழக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது."

மீசாலை ஐக்கிய தேசியக் கட்சி மத்திய கமிட்டிக் காரியாலயத்தில் நடந்த ஜனாதிபதி பதவியேற்பு வைபவ விழாக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி அமைப்பாளர் திரு. ஏ. தில்லைநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. தில்லைநாதன் மேலும் கூறியதாவது:-

"தலைவர் ஜே. ஆர். தலைமையில், தமிழ் மக்களும் தலைநிமிர்ந்து சகல உரிமைகளும் பெற்று வாழக்கூடிய நாள் அதிக தூரத்திலில்லை. அவர் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் தமிழ் மக்கள் ஒன்று திரண்டு, பூரண ஒத்துழைப்புக் கொடுக்க நாட்டின். சகல பிரச்னைகளையும் தீர்த்துவைப்பார் என்ற நம்பிக்கை சகல மக்கள் மனதிலும் மலர்ந்துள்ளது. எமது உரிமைகளைப் பெறுவதுமட்டுமன்றி, எமது பிரதேச அபிவிருத்தியிலும் அவர் கவனம் செலுத்துவார் என்ற நம்பிக்கையுண்டு.

தொகுதிக்கு ஆயிரம் பேர் வீதம் வேலைவழங்கி நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் வாலிபர்களின் குறைகளை நீக்கவும் அவர் பலதிட்டங்களை வகுத்துள்ளார்"

திருவாளர்கள் கு. பரராஜசேகரம், வே. பஞ்சாட்சரம், வி. நடேசன், ஈ. சொக்கலிங்கம், கே. வேலுப்பிள்ளை, க. சரவணமுத்து ஆகியோரும் பேசினார்கள். [க-அ]

## 'திருச்சபையின் ஐக்கியத்தை வளர்ப்போம்'

[அரியாலை]

'ஆதித்திருச்சபை சுமார் 1000 ஆண்டுகள்வரை ஒரே கொள்கையை உடையனவாக இருந்துவந்தது. சிலவேறுபட்ட அபிப்பிராயங்கள் காரணமாக கி பி 1054ம் ஆண்டு வரை ஆதித்திருச்சபை ரோம் திருச்சபை என்றும், கொன்ஸ்தாந்தி நோபிள் திருச்சபை என்றும் பிரிவுபட்டது 16-ம் நூற்றாண்டில் இத்திருச்சபை மேற்குத்திருச்சபை யென்றும்- கிழக்குத் திருச்சபை என்றும் இருபிரிவாகப் பிரிவுபட்டது. இதனால் மதவளர்ச்சி குறைவடைந்தாலும் கொள்கை வேறுபாடுகள் அதிகரித்தன'

இவ்வாறு சுண்டிக்குளி பரி. யோவான் கல்லூரி ஆலயத்தில் திரு ஆர் ஈ யே ஏ சேதுகாவலர் 'கிறிஸ்தவசபைகளின் ஐக்கியம்' பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்: 'கத்தோலிக்க திருச்சபையில் மதகுருவாகப் பணிபுரிந்த திரு மாட்டீன் லூதர் திருச்சபையின் கொள்கைவேறுபாடு காரணமாக சபையிலிருந்து நீக்கப்பட்டார். இவரே புரட்டஸ்தாந்து மதத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுஅதனை வழிநடத்தினர். புரட்டஸ்தாந்து சபையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் பப்பிஸ்ட் திருச்சபையென்றும் கொங்கிறிகேஷன் திருச்சபையென்றும் இரு புதியபிரிவுகள் தோன்றின. புரட்டஸ்தாந்து திருச்சபையின் மத போதகராக இருந்த யோன் லெஸ்லி அதிலிருந்துபிரிந்து மெதடிஸ்திருச்சபையை அமைத்தார் இச்சபைகளின்மத்தியில் கொள்கை அடிப்படையில் மாத்திரமே வேறுபாடிருந்தது.

"18-ம், 19-ம் நூற்றாண்டுகளில் பிளவு பட்டிருக்கும் திருச்சபைகளிடையே ஒரு ஐக்கியம் வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இதற்காகப்பலரும் உழைத்து வருகிறார்கள்' என்றார்.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நீமியா உரம்: மிளகாயிலும் வெங்காயத்திலும் அதிக விளைச்சலைப் பெற நீமியா உரத்தைப் பாவியுங்கள்.— ஓர் மில்க்வைற் தயாரிப்பு. 8362

### தேவை

இடியப்பம், பிட்டு, தோசை, பீச்றொட்டி தயார் செய்யக்கூடிய அனுபவம்வாய்ந்த ஆள் தேவை. சம்பளம் ரூபா 300-00 சாப்பாட்டு வேதனம் நாள் ஒன்றுக்கு ரூபா 5. பேக்கரி வேலை தெரிந்தவரானால் தனிச் சலுகை உண்டு. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். செந்தாமரை பேக்கரி, ஆ. ச. ஆறுமுகம், பாலாவோடை சந்தி, காரைநகர். 8402

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நவீன வசதியுள்ள வீடு, வாடகைக்கு அல்லது விலைக்கு தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 8426 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8426

அச்சகத்திற்கு பிளெற்றின் மெஷின் மைண்டர்கள், றூளிங் வேலை தெரிந்தவர்கள், ஆங்கிலம், தமிழ் கொம்போசிட்டர்கள், தொழில் பயில விரும்பும் பையன்கள் தொடர்பு கொள்ளவும். திருவள்ளுவர் அச்சகம், நல்லூர், யாழ்ப்பாணம். 8423

பத்து வருடங்களுக்கு மேலான அனுபவமும் நற்பழக்கமும் நம்பிக்கையும் வாய்ந்த லொறி லைசென்ஸ் உள்ள வான் டிறைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8411, C/o ஈழநாடு, லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8411

தேவன்ஸ் சீயாக்காய்பவுடர் மற்றும் தயாரிப்புக்கள் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. தேவன்மில் 159, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 8418


## "இன ஐக்கியம் தழைக்கட்டும்"

(யாழ்ப்பாணம்)

"ஜனாதிபதியாக ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் சமாதான உணர்வு மலர்ந்து இனங்களிடையே ஐக்கியம் தழைக்கட்டும்" என்று ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தை ஒட்டி யாழ். மானிப்பாய் வீதி, பள்ளிவாசலில் நடைபெற்ற பிரார்த்தனையின்போது பேஷ் இமாம் பேசுகையில் கூறினார்.

இந்நிகழ்ச்சியை ஜனாப் மொஹிதீன் முன்னின்று நடத்தினார்.

இதற்கான ஒழுங்கினை ஐ. தே. க. அமைப்பாளர் திரு. ம. அமிர்தலிங்கம் செய்திருந்தார். [உ]

## நிர்வாகிகள்

[திருநெல்வேலி]

மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய சிறுவர் இலக்கிய மன்றத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு கி சிவசரவணபவன், ஆசிரிய ஆலோசகர்கள் திருவாட்டிகள் க கார்த்திகேசு, சி கதிரித்தம்பி, யோ யோண்பிள்ளை, தலைவர் ஆ முகுந்தன், செயலாளர் கு விவேகானந்தி, உபதலைவர் ப் சிவபாமா உபசெயலாளர் யோ கிறிஷ்ரி, தனாதிகாரி சி பகீரதன், இணைப்பத்திராதிபர்கள் கு விவேகானந்தன் கி சுந்தரேஸ்வரன். [உ]

# வாக்குறுதிகள்

மாண்பு மிகுந்த ஜனாதிபதி திரு. ஜூனியஸ் றிச்சார்ட் ஜெயவர்த்தன அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொள்ளும் நிகழ்ச்சியை லட்சக்கணக்கான மக்கள் நேற்றுமுன் தினம் கொழும்பு மாநகரில் நேரில் கண்டு களித்தார்கள்.

நேரில் பார்க்க முடியாத இன்னும் பல லட்சம் பேர் வானொலி வர்ணனைகளைக் கேட்டும், பத்திரிகைகளில் படித்தும் மகிழ்ந்தார்கள்.

நேற்று ஜனாதிபதி அவர்கள் நாட்டு மக்களுக்குச் செய்தி விடுத்த நிகழ்ச்சியை கண்டி நகரில் பல்லாயிரம் பேர் கூடி நின்று பார்த்தும் கேட்டும் களித்தார்கள். அங்கு போகமுடியாதவர்கள் வானொலியில் கேட்டார்கள்.

கண்டி தலதாமாளிகையின் எண்கோண மண்டபத்திலிருந்து திரு. ஜெயவர்த்தன மக்களுக்குச் செய்தி விடுத்தது இது முதல் தடவையல்ல.

ஏற்கனவே ஒரு தடவை பிரதம மந்திரி என்ற முறையில் அவர் இதே மண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்குச் செய்தி விடுத்தார்.

அந்தச் செய்தியில் அவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் பலவும் இன்று செயல்படுத்தப்பட்டு வருவதைக் காண்கின்றோம்.

நேற்றைய தினம் அவர் செய்தி விடுத்தது, இந்த நாட்டின் செயல் அதிகாரம் பெற்ற முதலாவது ஜனாதிபதி என்ற முறையிலாகும்.

செய்தி விடுப்பதும் வாக்குறுதிகள் அளிப்பதும், பெரிய காரியமன்று.

கடந்த காலங்களில் பல நூற்றுக்கணக்கான வாக்குறுதிகளை இந்த நாட்டுத் தலைவர்களிடமிருந்து கேட்டுக் கேட்டு மக்களுக்குப் புளித்துப்போய்விட்டது.

ஆனல் அதேவிதமாக இன்றைய ஜனாதிபதியின் வாக்குறுதிகளும் காற்ருேடு காற்ருகப் போய்விடுவனவாகவிருக்காது என்றே மக்கள் நம்புகிருர்கள்.

நாட்டு மக்களுக்கு செய்தி விடுப்பதற்கு ஒரு புனிதமான இடத்தை ஜனாதிபதி தெரிந்தெடுத்ததிலிருந்தே அவர் தம் பேச்சை வெறும் வார்த்தை சாலங்களுக்காகவோ, பெருமை தேடிக்கொள்வதற்காகவோ நிகழ்த்தவில்லையென்பது புலனுகின்றது.

மனத்திலே புனிதமிருப்பவர்களுக்கே வார்த்தைகளும் புனிதமாகவரும்; வார்த்தை புனிதமானல் செயலும் புனிதமாகும்; புனிதமான செயல் புனிதமான பலனையே நல்கும்.

புதிய ஜனாதிபதியின் வாக்குறுதிகளும் நடவடிக்கைகளும் இந்த நாட்டை ஒரு புனிதமான நாடாகப் பரிணமிக்கச் செய்யும் என்று நம்புவோம்.

## பாராட்டுவிழா

(வவனியா)

வவனியா மகாவித்தியாலயத்திலிருந்து இடமாற்றலாகச் சென்ற அதிபர் திரு. கா. லோகசிங்கத்தின் சேவையைப் பாராட்டி மகாவித்தியாலய ஆசிரியர் சங்கத்தினல் இராப்போசன விருந்துடன், பாராட்டுவிழாவும் நடைபெற்றது.

## வேலை வழங்குமாறு கோரிக்கை

[உடுப்பிட்டி]

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பாவனையாளர் பிரதிநிதிகளாகப் பணியாற்றி, வேலை இழந்த ஊழியர்கள் தமக்கு மீண்டும் வேலை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரஸ்தாப ஊழியர்கள் இதுசம்பந்தமாக உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கத்தைச் சந்தித்து தமது குறையைப் போக்கடிமாறு கோரி மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தனர் இத்தூதுக்குழு திரு. எம். ஜே. ஏ. சுபேந்திரராஜன் தலைமையில் உடுப்பிட்டி எம். பியைச் சந்தித்தது.

# "தேசிய மறுமலர்ச்சிக்கு மனிதஉரிமைகள் மூலவேராக உள்ளன"

## —ஐ நா. சங்கத்தின் புதியதலைவர்

(கொழும்பு)

'ஐக்கியநாடுகளின் பிரதான குறிக்கோள், உலகத்தில் சமாதானத்தையும், பந்தோபஸ்தையும் நிலைநாட்டுவதே. இதற்கு மனிதஉரிமைகள் அத்தியாவசியமெனக் கருதப்பட்டுள்ளது. தேசிய மறுமலர்ச்சிக்கு மனித உரிமைகள்மூலவேராக அமைந்துள்ளன' என்று இலங்கை ஐக்கியநாடுகள் சங்கத்தின் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த வாரம் இங்கு நடைபெற்றபோது புதிய தலைவராக திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவுசெய்யப்பட்டார். புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு உரைநிகழ்த்துகையிலேயே மேற்கண்டகருத்தை வெளியிட்டார்.

இலங்கை ஐ நா.சங்கத்தின் தலைவராக நீதியமைச்சின் முன்னுள் காரியதரிசி திரு நிஹால் விக்கிரம கடைசியாகப் பணியாற்றினுர். இவருக்கு முன்னதாக முன்னுள் நீதி, நிதிஅமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பணிபுரிந்தார். சங்கத்தின் போஷகராகவும், ஆயுட்கால அங்கத்தவராகவும் ஜனாதிபதி இருக்கின்ருர். திரு. யோகேந்திரா துரைசுவாமி மேலும் தமதுரையில் கூறியதாவது:

'ஐக்கியநாடுகள் லட்சியங்கள் நன்கு பிரபல்யமானவையாகும். அதன்பணிகள், நாடுகளிடையே ஒன்றையொன்று தங்கியிருக்கும் உணர்வை ஏற்படுத்தியுள்ளன.

'மனித உரிமைகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ள சுதந்திரம், சமத்துவம், நீதி ஆகிய கோட்பாடுகளை அனுஷ்டிக்காமல் இருந்ததினலேயே பல தகராறுகள் தோன்றின. ஆகவேதான் ஐக்கியநாடுகள் சாசனத்தில் மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படுவதை வற்புறுத்திஇருப்பதுடன் உலகம் எங்கும் அடிப்படைச்சுதந்திரங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

'நாடுகளிடையே சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு மட்டும் மனித உரிமைகள் தேவைப்படவில்லை. நாட்டின் உள்ளேயும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அவை அவசியமாகின்றன இந்த உறுதியான சமாதான சூழ்நிலையை கொண்டுமட்டுமே, நாடுகளிடையே அசைக்கமுடியாதசமாதான அமைப்பை ஏற்படுத்த முடியும். கௌரவ ஜே. ஆர். ஜெயவர்த்தன மனித உரிமைகள் சம்பந்தமாகத்தெரிவித்திருப்பதை நாங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன், நியாயம் நிலைபெறக்கூடிய ஒரு தார்மீக சமுதாயத்தைக்கட்டி எழுப்புவதே அவரது குறிக்கோளாக இருப்பதையும் நாம் அறிவோம். எமது சங்கத்தின் குறிக்கோள்களில் ஒன்று; சகிப்புத் தன்மை, பரஸ்பர விளக்கம், ஒற்றுமை, இன, மத, மொழி வேறுபாடற்ற மக்களிடையே ஒத்துழைப்பு ஆகியவற்றை வளர்ப்பதாக அமைந்துள்ளது எமது இலட்சியங்களுக்கு ஏற்ப, ஒவ்வொரு பிரஜையும், சமத்துவத்துடனும் சுதந்திரத்துடனும் வாழவேண்டும். எமது சங்கம், ஐக்கியநாடுகளுக்கான ஒரு மக்கள் இயக்கமாக அமைந்திருப்பதுடன், ஐக்கியநாடுகளின் இலட்சியங்கள் சம்பந்தமான செய்திகளை இலங்கையிலுள்ள நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் நாம் பரப்பவேண்டும். எமது சங்கத்தின் குறிக்கோள்களுக்காக நாம் பாடுபடுவதன்மூலம், ஐக்கிய நாடுகள்சபை ஆரம்பிக்கப்பட்டதற்கான இலட்சியங்களை நிறைவேற்றக்கூடியதாகவிருக்கும்.'

## ஆசிரியருக்குக் கடிதம்:

# 4-ம், 5-ம்தர அதிபர் பதவிகள் அவமானச் சின்னங்களா?

கல்வி அமைச்சினல் கடந்த ஆண்டு பலதரப்பட்ட பதவி உயர்வுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அவையாவன; கல்விச்சேவையில் தரம் 5, 4, 3; விசேட பதவி தரம் 2; அதிபர்கள் தரம் 3, 2. விசேட அதிபர் பதவி தரம் 3, அதிபர்கள் தரம் 4, 5. இவற்றுள் 4, 5-ம் தர அதிபர் பதவிகளுக்கு மட்டும் போட்டிப் பரீட்சை. ஏனைய பதவிகளுக்குப் போட்டிப் பரீட்சை இல்லை. இது எந்த வகையில் நீதியாகும்? பட்டதாரிகள் விண்ணப்பிக்கக்கூடிய பதவிகளுக்குப் போட்டிப்பரீட்சை இல்லை. அதேவேளையில் பாவம், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மட்டும் விண்ணபிக்கக்கூடிய 4, 5-ம் தர அதிபர்களுக்கு அதுவும் உதவி ஆசிரியர்களிலும் குறைந்த சம்பளம் பெறும் பதவி உயர்வுக்கு மட்டும் போட்டிப் பரீட்சை ஏன்? 4-ம், 5-ம் தர அதிபர்களை மேலும் மேலும் அவமானப்படுத்தும் நோக்கமா? அல்லது அதிகாரிகளின் அலட்சியப் போக்கா?

இலங்கை நிருவாகசேவை, ஏனைய அரசாங்க சேவை பதவி உயர்வுகள், எழுதுவினைஞர் சேவை தரம் 2, 1, விசேட தரம் இவைகளுக்குக் கூட சேவைமூப்பையும் அடிப்படையாகக் கொண்டு பதவி உயர்வு வழங்கும் நடைமுறை அமுலில் இருக்கும்பொழுது கல்வி அமைச்சைப் பொறுத்தவரையில் 4, 5-ம் தர அதிபர் பதவிகளுக்கு மட்டும் போட்டிப் பரீட்சை நடத்துவதன் நோக்கந்தானென்ன?

இந்த விஷயத்தில் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் தலையிட்டுக் கல்வி அமைச்சிடம் ஆட்சேபம் தெரிவித்ததாக இதுவரை பத்திரிகையெதிலும் பிரசுரமாகவில்லை. ஆட்சேபம் தெரிவித்து இதற்கொரு விமோசனம் பெறுவதை விடுத்து கல்வி அமைச்சின் செயலை மனப்பூர்வமாக ஆதரிப்பது போன்று கருத்தரங்குகள் நடாத்துவதன் நோக்கமென்ன? 4, 5-ம் தர அதிபர்கள் அடிமைச்சின்னங்கள் என்பதை ஆசிரிய சங்கமும் ஆமோதிக்கின்றதா? பட்டதாரிகளுக்குச் சலுகை. பயிற்சிய ஆசிரியர்களுக்குச் சோதனையா பதவி உயர்வுக்கு குறைந்த சம்பளம் வழங்கும் திட்டம் வேறு எந்தத் திணைக்களங்களிலாவது நடைமுறைப்படுத்தப் படுகின்றதா? வேதனை தரும் இச்சோதனையை உடன் இரத்துச்செய்வதற்கு ஆவன புரியுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தை விநயமாக வேண்டுகின்ருேம்.

பயிற்சி பெற்ற தமிழாசிரியர்கள்

யாழ்ப்பாணம்.

# ஏன் இந்தப் பாகுபாடு?

அச்சுவேலி கிராம வைத்திய சாலை பல இடங்களுக்கு ஒரு மைல் கல்லாக அமைந்திருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். குறிப்பாக உடுப்பிட்டியில் இருந்தும், வல்லைப்பகுதியில் இருந்தும், நீர்வேலிப்பகுதியில் இருந்தும் இவ்வைத்திய சாலைக்கு தினமும் ஏராளமான நோயாளர்கள் வந்துகொண்டிருக்கிருர்கள். ஆனலும் இவர்கள் நேரத்திற்கு வைத்திய சாலைக்கு வரமுடியாமல் இருக்கின்றது. ஏனெனில் இவ்வைத்தியசாலைக்கு அருகில் கடுகதி பஸ் நிற்பாட்டப்படுவதில்லை.

அச்சுவேலி வைத்திய சாலைக்கு அருகாமையில் உள்ள பிரதேசத்தில் பாடசாலைப் பிள்ளைகள் பலரும் உத்தியோகத்தர்கள் பலரும் தினமும் பாடசாலைக்கோ வேலைஸ்தலத்திற்கோ செல்லவேண்டி இருக்கின்றது. இவர்கள் நேரத்திற்கு செல்லவேண்டுமானல் கிட்டத்தட்ட அரைமைல் தூரம் நடந்து சென்றுதான் அச்சுவேலி சந்தியில் கடுகதி பஸ் எடுக்கவேண்டியுள்ளது. அப்படி சென்ருலும் பஸ் சில சமயம் முன்னதாகச் சென்றுவிடும். ஆகவே இக்கஷ்டங்களைப் போக்கி, பாகுபாடு காட்டாமல் கடுகதி பஸ்சை அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் நிற்பாட்டச் செய்யுமாறு கோப்பாய் தேசிய அரசுப் பேரவை உறுப்பினரை கேட்டுக்கொள்கின்றேன்.

தவம் கிருஷ்ணமூர்த்தி

பயித்தோலை,
அச்சுவேலி.

கணவன் சொல் தட்டாத பத்தினிப் பெண்களைப் பெற்ற புருஷர்கள் அவர்களை விட்டுவிட்டு, எதிர்த்துப் போராடும் நவநாகரீகமணிகளையே நாடுகின்றனர். இக்காலக் கணவர்கட்குச் சொல்வதற்கெல்லாம், தலையாட்டும் பொம்மை தேவையில்லை. துடுக்கு, சுதந்திர உணர்ச்சியுள்ள பெண்களுக்குத்தான் இன்று கிராக்கி:

—லக்ஷ்மி.

## நீர்ப்பாசன வசதியின்றி

# 420 ஏக்கரில் மிளகாய் வெங்காயம் அழியும்நிலையாம்

## விஸ்வமடு வி.சங்கத் தலைவர் அறிக்கை

(விஸ்வமடு)

தமது கோரிக்கைகளை முன்வைத்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட விவசாயிகள் முஸ்தீபுகள்செய்துவருவதாகவிஸ்வமடுக்குளம் ஏற்று நீர்ப்பாசன விவசாயிகள் சனசமூக நிலையத் தலைவர் திரு. கி. ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது.-

'எமது கோரிக்கைகள் மேலிடத்தால் தட்டிக்கழிக்கப்படுகின்றன. நாம் எமது கோரிக்கைகளை வலியுறுத்தியாழ். அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடாத்தியபோது 1978ம் ஆண்டு ஜனவரியில் பயிர்ச்செய்கைக்குரிய 16 பாரிய நீர் இறைக்கும் இயந்திரங்களை அமைத்துத் தருவதாக உறுதியளித்தார். ஆனல் பெப்ரவரி மாதமாகியும் இது விடயத்தில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதனல் இவ் விவசாயிகள் அதிருப்திகொண்டுள்ளனர். இதுபற்றி முல்லைத்தீவு எம்.பி.ஆட்சிமன்றத்தில் குரல்கொடுத்து அமைச்சின் கவனத்தை ஈர்க்கச்செய்தும் பயன் எதுவும் ஏற்படவில்லை. எனவே விஸ்வமடு விவசாயிகள் கடந்தவருடம் நடத்தத் திட்டமிட்ட விவசாயிகள் கோரிக்கைகள் தொடர்பான சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்துவது தவிர்க்க முடியாததாகிவிட்டது விரைவில்நீண்டபோராட்டம்நடத்தவுள்ளோம். இதுபற்றி அரசாங்க அதிபருக்கும் ஏனைய உயர் அதிகாரிகளுக்கும் அறிவிப்போம்.

விவசாயிகளின் நீர்ப்பாசனப் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இருப்பது உபஉணவு உற்பத்தியாளர்க்குப் பெரும் கவலையை அளித்துள்ளது.

நீர்ப்பாசனவசதியின்றி 420 ஏக்கரில் மிளகாய், வெங்காயம் ஆகிய உபஉணவுப் பயிர்கள் அழிந்துவிடும் அபாயநிலையில் உள்ளன.

இதனல் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் குடியேற்றத் திட்டத்தைவிட்டு வெளியேறக்கூடிய விசனிக்கத்தக்க நிலையும் உள்ளது.' (உ)

......

# 12 பேர் கொண்ட குழுநியமனம்

[கொழும்பு]

நீதிமன்றங்களில் குற்றவியல் வழக்கின் நடைமுறைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நீதிஅமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் 12 பேர் கொண்ட குழுவை தெரிவு செய்துள்ளார்.

இக்குழுவில் கீழ்க்காணுவோர் இடம் பெற்றுள்ளனர். கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ஜே. எம். ஏ. சோஸா கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. கே. சி. டி. சில்வா, திருவாளர்கள் எச். டபிள்யூ. ஜெயவர்த்தன கியூ. சி., சி. ரங்கநாதன் கியூ சி., எரிக் அமரசிங்கா, எட்லி பெரேரா, ஜி ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] ஏ. மகேசன் டபிள்யூ கே. பிரேமரத்தின, டஸ்டன் டி. சில்வா செனத்செனரத்ன உதவிசொலிசிஸ்டர் ஜெனரல் திரு. எஸ். சிவராச[illegible]

### மத்திய கிழக்குவிவகாரம்:

# சமரஸ முயற்சியை நிறுத்தாதீர்!

# சதாத்திடம் கார்ட்டர் கோரிக்கை

வாஷிங்டன், பெப். 5

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தைகளை இடையில் நிறுத்திவிடவேண்டாம் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தைக் கேட்டுக்கொண்டார்.

வாஷிங்டனில் இருதலைவர்களும் மூன்று மணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இது இவ்வாறு இருக்க தற்போது பாரதத்திற்கு விஜயம் செய்துள்ள ஈரானிய மன்னர் ஷா எகிப்தின் சமாதானநடவடிக்கைகள் தோல்வி கண்டால் மத்திய கிழக்கில் பயங்கர விளைவுகள் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுத்தார்.

**அல்ஜீரியாவில் அரபுத் தலைவர்கள்**

எகிப்திய ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு எதிரான கருத்துக்கொண்டுள்ள அரபு நாடுகள் அல்ஜீரியாவில் கூடின.

தம்முடன் ஈராக்கையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சிரியாவும் பலஸ்தீன ஸ்தாபனமும் தீர்மானித்தன. (உ)

**சீனத்தலைவர் பாராட்டு**

இதேவேளை எகிப்தின் சமாதான நடவடிக்கைகளை சீனத் தலைவர் பாராட்டியுள்ளார்.

# பூட்டோவுக்கு எதிராக ஆருவதுவழக்குத் தாக்கல்

இஸ்லாமாபாத், பெப். 5

பாகிஸ்தான் முன்னாள் பிரதம மந்திரி சுல்பிகார் அலிபூட்டோவுக்கு எதிராக ஆருவது வழக்கு பாகிஸ்தான் இராணுவ அரசினால் நீதிமன்றத்தில தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வரி செலுத்தாமை, சட்ட விரோதமாகக் கார்களை இறக்குமதி செய்தது, வெளிநாடுகளில் உள்ள பாகிஸ்தான் தூதரகங்களில் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தது ஆகிய குற்றச்சாட்டுகள் இவ்வழக்கில் பூட்டோவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன.

கொலைக் குற்றச்சாட்டின் பேரிலும் பூட்டோவுக்கு எதிராக லாகூர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கலாகியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

### உயர்மட்ட விசாரணை

ரங்கூன், பெப். 5

பர்மாவின் முன்னாள் அதிகாரிகள் எழுவருக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் உயர்மட்ட விசாரணை நடைபெற்று வருகிறது. (உ)

### இளைஞர் பலி

(யாழ்ப்பாணம்)

திருமணத்தை எதிர்பார்த்திருந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த 26. வயதான இளைஞர் டேவிட் என்பவர் நச்சுத்திராவகத்திற்குப்பலியானார்.

### நல்லூர்த் தொகுதியில்

[திருநெல்வேலி]

ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தைஒட்டி நல்லூர்த் தொகுதி ஐ. தே. கட்சி அமைப்பாளர் ரி. மனோகரன் தலைமையில் நல்லூர்த் கந்தசாமிகோவிலில் கல்வியங்காடு சென். சவேரியார் ஆலயம் திருநெல்வேலி சட்டநாதர் கோவில் ஆகிய ஆலயங்களில் விசேட பூசையும் ஆராதனையும் சிரமதானங்களும் நடைபெற்றன.

### “தூய்மையாக செயல்படுவோம்”

[வவனியா]

“நாம் ஒருகட்சியைச்சார்ந்தவர்களாக இருந்தாலும் சங்கத்தின் வளர்ச்சியைப் பொறுத்தவரையிலும் ஊழியர்களின் தேவைகளைப் பொறுத்தவரையிலும் தூய்மையாகவே நடப்போம் எந்தவித பாரபட்சமும் காட்டமாட்டோம்” என்று வவனியா தெற்குப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் புதிய இயக்குநர் சபையினருக்கு வரவேற்பளிக்கப்பட்ட போது ஊழியர்கள் மத்தியில் புதிய தலைவராக பொறுப்பேற்றுப் பேசிய சட்டத்தரணி ஐ. கேதிஸ்வரன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் “பொதுமக்களுக்காக ஏழை மக்களுக்காக இயங்குகின்ற இந்த ஸ்தாபனங்கள் ஏழை மக்களால் போற்றக்கூடியதாக நடாத்தப்படவேண்டும். அதற்கு ஊழியர்களது ஒத்துழைப்பு இல்லாவிட்டால் தூய்மையான முறையில் நடத்த முடியாது.” என்றார்.

### அமிருக்கு விருந்து

[சுழிபுரம்]

எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன் துறை தொகுதி தேசியப்பேரவை உறுப்பினருமான திரு. அமிர்தலிங்கத்திற்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பெற்றார் ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து இராப்போசன விருந்தளிக்கவுள்ளனர்.

### “இந்திய மாநிலங்களில்

# சுயாட்சிக் கோரிக்கை வலுப்பட்டு வருகிறது”

## நாடுதிரும்பியஇலங்கைப் பிரதிநிதி தகவல்

[யாழ்ப்பாணம்]

இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு பங்கம் ஏற்படாத வகையில் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கவேண்டும் என்ற கோரிக்கை இந்தியாவில் உள்ள பல மாநிலங்களிலும் எழுந்துள்ளதாக கல்கத்தாவில் நடைபெற்ற ஐந்தாவது அகில இந்திய சமூக விஞ்ஞான மூன்று நாள் மாநாட்டில் கலந்துகொண்டு நாடு திரும்பிய மாநாட்டின் இலங்கைப் பிரதிநிதியும், மக்கள் ஜனநாயக கட்சிப் பொதுச் செயலாளருமான திரு. நிஹால் பெரேரா, தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது நடைபெற்ற இளைஞர் கலந்துரையாடலில் அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவின் முதுபெரும் அரசியல் தலைவர்களான வங்க முதல்வர் ஜோதிபாசு, ஜம்மு-காஷ்மீர் முதல்வர் ஷேக் அப்துல்லா, நம்பூதிரிபாத் ஆகியோர் மாநிலங்களுக்கு அதிக அதிகாரத்தை மத்திய அரசு வழங்கும் சமயத்தில், பிரிவினைத் தூபங்களுக்கு சாவுமணி அடிக்கப்படவேண்டுமென தெரிவித்துள்ளனர். சகல இனங்களுக்கும் சமத்துவம் கிடைக்கும்வகையில் சுயாட்சியை அவர்கள் விரும்புகின்றனர்.

இந்தியாவில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வங்காளத்திலும், திரிபுரா மாநிலத்திலும் பெரும்பான்மை பெற்றுள்ளது. நடைபெறவிருக்கும் அஸாம் பிரதேசத்திலும் பெரும்பான்மையான வெற்றி கிடைக்குமென்றார்.

“இந்தியமக்கள் இடதுசாரி முன்னணியை உருவாக்குவதன் மூலம் தமது பிரச்னைகளுக்குத் தீர்வுகாண விரும்புகின்றனர். இதற்கான அமைப்பு முறையை உருவாக்கியுள்ளனர். இது விடயமாக நம்பூதிரிபாத், அசோக்மித்தரா போன்ற தலைவர்கள் என்னுடனே கலந்தாலோசித்தனர். அங்கு என்னிடம் உரையாடிய பல மாநில பிரமுகர்களும், இனங்கள் சமத்துவத்துடன் வாழ்வதற்கு சமஷ்டி முறையே சிறந்தது என்றும் கருத்துத் தெரிவித்தனர்” என்றார்

இக்கலந்துரையாடலை செந்தமிழர் இயக்கத் தலைவரும் கம்யூனிஸ்ட் பிரமுகருமான திரு. வி. பொன்னம்பலம் ஒழுங்கு செய்திருந்தார். [கெ-உ]

### வெள்ளப் பெருக்கு:

# இந்தோனேஷியாவில் 42 பேர் பலி

ஜகார்த்தா. பெப்.5

இந்தோனேஷியாவில் வெள்ளப்பெருக்கால் 42 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வெள்ளப்பெருக்கால் உடைமைகளுக்கும் பெருமளவுசேதம் ஏற்பட்டுள்ளதாகவும் வெள்ள நிவாரண வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

### சத்திய பிரமாணம்

[கண்டி]

புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் 17 மந்திரிகள் இன்று கண்டியில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஏனைய மந்திரிகள் நாளை கொழும்பில் சத்திய பிரமாணம் செய்து கொள்வர். [உ]

# “மாநிலத்தில் தொழில்வளம்: மத்திய அரசு உதவும்”

### — முதல்வர் எம். ஜி. ஆர்.

சென்னை, பெப். 5

“‘கிராமப்புறங்களில்தொழிற்சாலைகளை நிறுவி தொழில் வாய்ப்பு அளிப்பதற்கு உதவுவதாக மத்திய அரசு மாநில அரசுக்கு உறுதியளித்துள்ளது” என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினார்.

சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் மேலும் பேசுகையில் கூறிதாவது:

“மாநிலத்தில் வேலையற்றோரின் இன்னல்களைவதில் அரசு தீவிர கவனம் செலுத்திவருகிறது. கிராமங்களில தொழிற்சாலைகளை நிறுவி தொழில்வளத்தைப் பெருக்குவதுடன் வேலைவாய்ப்பு அளிக்கவும் தொழில் அதிபர்களும் ஒத்துழைப்பு நல்குவர் என எதிர்பார்க்கிறேன்.” (உ)

## மனோகரனின் கண்ணாடி மாளிகையை கலைஞர் வாங்க விருப்பம்

சென்னை, பெப். 5

தமிழக நிதியமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரனது அண்ணாநகர் கண்ணாடிமாளிகையை இரண்டுலட்சத்து பதின்மூவாயிரம் ரூபாய்க்கு வாங்குவதற்கு தி மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி விருப்பம் தெரிவித்து தந்தியொன்றை திரு. மனோகரனுக்கு அனுப்பியுள்ளார்.

தமிழக சட்டசபை உறுப்பினர்களது சொத்துவிபரத்தை வெளியிடவேண்டுமென சட்டசபைத் தீர்மானத்துக்கமைய மனோகரன் தனது கண்ணாடி மாளிகைக்கு இரண்டு லட்சத்து பதின்மூவாயிரம் என பெறுமதி காட்டியிருந்தார். தி. மு. கழகத்தினர் இதற்கு ஆட்சேபம் தெரிவித்து இது பல லட்ச ரூபாய் பெறுமதியானது என குற்றம் சாட்டியிருந்தனர்.

இக்குற்றச்சாட்டுக்கு திரு. மனோகரன் அண்ணாநகர் பொதுக்கூட்டத்தில் பதிலளித்து, இவ்வீட்டை எனது பெறுமதிக்கு தி. மு. க. வினர் வாங்கவிரும்பினால் 15 நாள் அவகாசமும் தருகிறேன் என்றும் கூறியிருந்தார்

இதற்குப்பதிலளித்த கலைஞர் தாமே அந்த மாளிகையை வாங்கவிருப்பதாக, சென்னையில் இருந்து தந்தியொன்றை நாஞ்சிலுக்கு அனுப்பிவைத்துள்ளார். (கெ-உ)

## கைத்தறித் துறையில் தமிழகத்தின் முன்னேற்றம்

### ஆளுநர் பாரட்டு

சென்னை, பெப்.5

‘தமிழ்நாடு கைத்தறித் துறையில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது’ என்று தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி கூறினார்.

சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் மேலும் பேசுகையில், ‘தமிழ் நாட்டில் தயாரிக்கப்படும் காஞ்சிபுரம் முதலான சேலைகள் நீடித்த பாவனைக்கு உதவுவனவாகவும் சர்வதேசப் புகழ்பெற்றனவாகவும் விளங்குகின்றன’ என்றார். (உ)

**Regal** (Jaffna)
Daily 4-45, 7-00 & 9-30 p. m.
Hayley Mills Hywel Bentten
in
**TWISTED NERVE**
(color)

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி-சரோஜாதேவி- வாணிஸ்ரீ- நாகேஷ்
K. பாலச்சந்தரின்
**"தாமரை நெஞ்சம்"**
(புதிய பிரதி)

**50-வது** நாளைநோக்கி வெற்றிநடைபோட்டு ஓடுகிறுள்
**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
**இன்ஸ்பெக்டர் மனைவி**
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.
குறிப்பு: கடைசி இரு வாரங்கள் மட்டும்

**2-வது** வெற்றி மாதம்
**ராணி** வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
**நான் உங்கள் தோழன்**
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**கணவன்**

கடைசிவாரம்
**லிடோ** எம். ஜி. ஆர். - லதா நடித்த
(யாழ். நகர்) போன்: 7693
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
**நீதிக்கு தலைவணங்கு**

**மனோஹரா** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—விஜயலக்ஷ்மி நடித்த
**வல்லவன் ஒருவன்**

தினசரி: 10-30, 2-30-6-30, 9-30
**ராஜா** ஜெய்சங்கர் கே.ஆர்.விஜயா சோ
(யாழ்ப்பாணம்) விஜயகுமார் மனோகர்
நடித்த




பாவற்குளம் கொலை வழக்கு:

# மூன்று எதிரிகளும் விடுதலை: சாட்சிகளுக்கு பட்டா ரத்து

(யாழ்ப்பாணம்)

பாவற்குளம் கொலைவழக்கில் எதிரிகள் மூவரும் விசாரணை நடுவில் விடுதலைசெய்யப்பட்டனர். சாட்சியான குணவதி முரண்பாடாகச் சாட்சியமளித்ததால் எச்சரிக்கை செய்யப்பட்டார். சாட்சிகளான குணவதி, கிறிபண்டா இருவரினதும் 'பட்டா' ரத்துச் செய்யப்பட்டது.

இவ்வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப். எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 1974ம் ஆண்டு பெப்ரவரி 28ந் தேதி பாவற்குளத்தைச்சேர்ந்த அப்துல் ஹமீத் ஆதம்பாவா, முகம்மது அப்துல்காதர், வையாதன் காதர் கனி ஆகியோர் ஹேரத் ஹேமிகே ஜயரட்ண என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

விசாரணை நடுவில் ஜூரி சபையினர் விசாரணையைத் தொடரவிரும்பவில்லை யென்றும் எதிரிகள் நிரபராதிகள் என்றும் தெரிவித்தனர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர் பி சபாரத்தினம், சட்டத்தரணி என் கிறிகாந்தா சட்டத்தரணி எம் சிற்றம்பலம், சட்டத்தரணி எஸ் சுரேந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். அரச தரப்பில் சட்டத்தரணி ஆர். ஐ. கனகரத்தினம் ஆஜரானர்.

குணவதி முரண்பாடாகச் சாட்சியமளித்ததால் நிமாண்டில் வைக்கப்பட்டார்.

சட்டத்தரணி ஆர்.பி. சபாரத்தினம், நீதிபதியின் அனுமதிபெற்று சாட்சிகளை இங்களத்தில் குறுக்குவிசாரணைசெய்தார். [ச-அ]

## திருமணத்தை விரும்பாத இளைஞர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

திருமணத்தை விரும்பாத இளைஞர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜோன் என்பவரின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு ஏ அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினர்.

மூன்று மாதத்திற்குமுன் இறந்தவருக்கும் ஓர் இளம் பெண்ணுக்கும் திருமணப்பதிவு நடந்ததென்றும், இத்திருமணத்தை இறந்தவர் விரும்பவில்லை என்றும் விசாரணையில் தெரியவந்தது.

'இந்தக்கல்யாணம் நடக்காது' என அவர் அடிக்கடி கூறிவந்தாராம். சம்பவதினம் வேலையால் திரும்பியதும் நச்சுத்திராவகம் அருந்தினர் எனக் கூறப்பட்டது.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-அ)

## வட்டு. எம். பி. உறுதி

[சுழிபுரம்]

தொல்புரம் பாணவெட்டி அரசினர் அபிவிருத்திச் சபையினருக்கு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு வைத்தியசாலை வளவில் சிப்பிணிகள் விடுதியை கட்டுவதற்கான ஏற்பாட்டை விரைவில் செய்து தருவதாக உறுதியளித்துள்ளார். வைத்தியசாலையில் நடைபெற்ற அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட அவர் சபையினரின் வேண்டுகோளை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். மற்றும்உடனடி அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக ஒரு மகஜரும் அவரிடம் கையளிக்கப்பட்டது. (உ)

## பயிற்சிமுடிந்து6மாதமாகியும் இறுதிப் பரீட்சை இல்லை!

[சங்கானை]

தேசிய தொழிற் பயிற்சிச் சபையில் கடந்த நான்கு வருடகாலமாக இயந்திரவியல் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு ஆறுமாதகாலமாகியும் இறுதிப் பரீட்சை நடாத்தப்படவில்லையாம்!

இப்பரீட்சையை எந்தவித காரணமுமின்றி காலம் தாழ்த்துவதனால், இங்கு பயிற்சிபெற்றோர் சான்றிதழ் இன்றி வேலை வாய்ப்பைப்பெற முடியாது திண்டாடுகின்றனர்.

தேசிய தொழிற் பயிற்சிச் சபை வழங்கும் சான்றிதழ் மூலம் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புப்பெறும் நல்ல சந்தர்ப்பத்தை தாம் இழந்துள்ளதாக இங்கு பயிற்சி பெற்றமாணவர்கள் மனவிரக்தியடைந்த நிலையில் புகார்தெரிவிக்கின்றனர்.

## யாழ்டன் கல்லூரியில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்டன் கல்லூரியில் கடந்தவாரம் ஸ்தாபகர் தினக் கொண்டாட்டமும், ஆசிரியர் மாணவர்களது சிரமதானப் பணியும் சிறப்பாக நடைபெற்றன.

ஸ்தாபகர் தினவிழாவில் கல்லூரிமாணவர்களது மரதன் ஓட்டப்போட்டியும் பழைய மாணவர்களது சைக்கிள் ஓட்டப் போட்டியும் சிறப்பு நிகழ்ச்சிகளாக அமைந்தன. பெருந்தொகையான மக்கள் இப்போட்டிகளைக் கண்டுகளித்தனர். வெள்ளிக்கிழமை கல்லூரியில் நடைபெற்ற சிரமதானப்பணியில் ஆசிரியர்களும் ஈடுபட்டனர்.

இக்கல்லூரில்பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டுவரும் இருமாடிக் கட்டிடவேலை பூர்த்தியாகிவருவதனால், கல்லூரிச்சுற்றுப்புற சுத்திகரிப்புவேலை அவசிய மென்பதைக்கண்ட ஆசிரியர்கள், இச்சிரமதானப் பணியை ஒழுங்குசெய்தார்கள் நல்ல முறையில் ஒழுங்குசெய்யப்பட்டு நடைபெற்ற இச்சிரமதானப் பணியினால் கல்லூரி மிக அழகாகவும், புனிதமாகவும் காட்சியளிக்கிறது

## யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிரமதானம்

[யாழ்ப்பாணம்]

ஜனதிபதி பதவியேற்பு வைபவத்தையொட்டி யாழ். பெரியாஸ்பத்திரி வெளிநோயாளர்பகுதி முன்றலில் சிரமதானமும், மரம் நாட்டலும் இடம்பெற்றன.

சட்டத்தரணி திரு எஸ் வல்லிபுரம் இதற்குத் தலைமை தாங்கினர்.

வைத்திய அதிபர் டாக்டர் வி எஸ் அமரசிங்கம் வைத்தியசாலை நிர்வாக செயலாளர் திரு எஸ் யோகேஸ்வரன் டாக்டர் ஏ தேவமதுரம், திரு எஸ் திலகர், திரு ஏ கே ஜெயரட்னசிங்கம் ஆகியோரும் சமூகமளித்தனர். இவ்வைபவத்தில் கலந்து சிரமதானம் செய்த யாழ்ப்பாணம் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் அனைவர்களுக்கும் அரசாங்க சுகாதாரசேவை பொது ஊழியர் சங்க உதவி பொது செயலாளர் திரு. கே. செல்வராஜா நன்றிதெரிவித்தார். [உ]

**RIO** (Jaffna)
Daily 4 Shows
**HIGH VELOCITY**

**நாகம்ஸ்**
[சுன்னுகம்]
தினசரி: 6-45, 10-00
ராஜன்-பானுமதி
**பூவும் பொட்டும்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30,
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
**தாயைக் காத்த தனயன்**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெய்சங்கர் - சுஜாதா
**நீ ஒரு மகாராணி**

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய் விஜயா
**மூன்று முடிச்சு**
இசை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

## வியட்நாம்

நியுயோர்க், பெப். 5

ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள வியட்நாமியத்தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்கா பாதகமாகச் செயல்படுவதாகக் குற்றம் சுமத்தியே இந்த நடவடிக்கையை வியட்நாம்மேற்கொண்டுள்ளது.



# இடதுசாரி இயக்கம் துரோகம் இழைக்கக் கூடாது!

## தமிழ் மக்கள்நிலைபற்றி வி.பி.

(யாழ்ப்பாணம்)

"தமிழ்மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு அரசாங்கம் கூட்டவிருக்கும் மகாநாட்டை பகிஷ்கரிப்பதோ தெளிவான கொள்கையை முன்வைக்கத்தவறுவதோ தமிழ்பேசும் மக்களுக்கு இடதுசாரி இயக்கம்தொடர்ந்து செய்யும் துரோகமாகவே கருதப்படும்".

இவ்வாறு உடுவில்தமிழ்இளைஞர் மன்ற ஆதரவில் மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம் கூறினர்.

இக்கருத்தரங்கில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டுபேசிய திரு பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

"இன்றைய அரசு தேசிய இனப்பிரச்னை சம்பந்தமாகப் பாராளுமன்றத்திற்குள்ளும் பிரதிநிதித்துவம் பெறத்தவறிய நிலையிலும் வெளியிலும் இயங்கிவரும் அரசியல்கட்சிகளை மகாநாடு ஒன்றுக்கு அழைத்து அபிப்பிராயங்களை அறிந்து தீர்வு ஒன்றை முன்வைக்க இருப்பதாக பேச்சுக்கள் அடிபடுகின்றன. இதுஉண்மையாயின் இடதுசாரிக்கட்சிகள் தாம்ஏற்றுள்ளமார்க்ஸிஸ சிந்தனையின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமையோடு கூடிய சுயாட்சிஅமைப்பைஉருவாக்கும் நிலைமையில் அதனை தேசியத்தீர்வு அமைய வேண்டுமென்று வலியுறுத்துவது இன்றியமையாத ஒன்றாகும்.

"இலங்கையின்தொழிலாளிவர்க்கத்தினதும் பிற உழைக்கும் வர்க்கங்களினதும் நம்பிக்கையைப் பெற்றுள்ள இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி அங்கம்வகிக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணி தமிழ்மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளைப் பற்றிய சரியான நிலைப்பாடு ஒன்றைக்கொள்வது என்றுமில்லாத அளவுக்கு அவசியமானதாக மாறியுள்ளது.

அரசாங்கம் அழைக்கத்தக்க மகாநாட்டை பகிஷ்கரிப்பதோ தெளிவான கொள்கையைமுன் வைக்கத்தவறுவதோ தமிழ் பேசும்மக்களுக்கு இடதுசாரி இயக்கம் தொடர்ந்தும் செய்யும் துரோகமாகவே கருதப்படும். இந்நிலையைத் திருத்தி தமிழ்மக்களின் நம்பிக்கையைப் பெறத்தக்க வகையில் இடதுசாரி இயக்கம் தமது தவறை லெனினிஸ இனவிடுதலை வழியை தயக்கமின்றி முன்வைக்கவேண்டும்.

### ஜே. ஆரின் ஆட்சியைப் பலப்படுத்தும்

இது ஜே ஆரின் ஆட்சியைப் பலப்படுத்தும் என்ற சாக்குப் போக்குகள் சொல்லி ஒதுங்கி நிற்பது தமிழினப் பிரச்னைக்கான தீர்வைத் தொடர்ந்தும் முன்வைக்க இடதுசாரிகள் அஞ்சுகின்றார்கள் என்ற பழிச் சொல்லுக்கு இடம்தரும்.

இந்நிலையைப் பூரண பொறுப்புணர்வுடன் ஏற்றுச் செயல்பட இடதுசாரி இயக்கம் முன்வருவதன் மூலம் தமிழ்மக்களையும் எழுச்சிபெற தென்னிலங்கை உழைப்பாளர் சக்திகளுடன் ஓரணியில் திரள மிகச் சிறந்த வழியாக அமையும். எனவேதான் வர்க்கப் போராட்டத்திற்குப் பலம்தர தமிழ்இன விடுதலைக்கு வழி காண்போம்.

"தமிழ்மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளை வென்றெடுக்க மார்க்ஸிஸ்டுகள் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள ஜனநாயக சக்திகளுடன் ஒன்றிணைந்து போராடவேண்டும்"

சட்டத்தரணி திரு. திருநாவுக்கரசு பேசுகையில் கூறியதாவது:

தமிழ்மக்களின் நியாயபூர்வமான உரிமைகளை அங்கீகரித்துப் போராட முன்வரும் மார்க்ஸிஸ சக்திகளுடன்அகில இலங்கை ரீதியாக இணைந்து போராட முன்வருவது நியாயமே.

இன்று கத்திமுனையில் நடப்பதுபோன்ற பரிசோதனைகள் மலிந்த ஒரு சூழ்நிலையில் அண்ணன் அமிர்தலிங்கம் செயல்படுகிறார்.

பாராளுமன்ற சம்பிரதாயம் பொதுஜன அபிப்பிராயம் இளைஞரின் துடிப்பு பெரியவர்களின் மிதவாதப் போக்கு அத்தனைக்கும் மத்தியில் அரசுக்கு அவகாசம்தரும் நிலைமை இன்று தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு ஏற்பட்டுள்ளது.

இத்தகைய பரிசோதனைகளின் மத்தியில் 30 லட்சம் தமிழ் மக்களின் நலனையே மூச்சாகக்கொண்டு உழைத்து வரும் கூட்டணித் தலைவர்களில் நாம் நம்பிக்கையுடன் செயல்படுவோம். [இ]

## அமரர் ஜி.ஜி...

(1ம் பக்கத் தொடர்ச்சி]

அழகையா, திரு க முருகரத்தினம், திரு சபா செந்தில்ராசா, திரு க சிவதாசன், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்கள் இளைஞர், மகளிர் பேரவை உறுப்பினர்கள் உரைநிகழ்த்துவார்கள். [ஈ]

## கனகர் உடல்நிலை

[கொழும்பு]

துப்பாக்கிச்சூட்டுக் காயங்களினால் காயமுற்று, சிகிச்சை பெற்றுவரும் பொத்துவில் 2-வது எம் பி திரு எம் கனகரத்தினத்தின் உடல்நிலையில் ஓரளவு முன்னேற்றம் கண்டிருப்பதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது அவர் தொடர்ந்து இளநீரும், தோடம்பழச் சாறும் அருந்தி வருகின்றார்.

பூரண ஓய்வுபெறவேண்டும் என்று டாக்டர்கள் தெரிவித்த ஆலோசனைக்கிணங்க, கனகரை பார்க்க எவரும் அனுமதிக்கப்படவில்லை. [ம]

## சகல மக்களுக்கும்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம். ஒன்று வாழ்க்கைச் செலவு. மற்றது வேலையில்லாத்திண்டாட்டம். இந்த அரசு பதவியேற்றபோது நாட்டில் பன்னிரண்டு லட்சம் பேர் வேலையில்லாதிருந்தனர். அதேநேரத்தில் வாழ்க்கைச் செலவும் நாளுக்குநாள் அதிகரித்தது.

### ஐந்து விசேட திட்டங்கள்

"தொழில்பெற்று வாழ்க்கை நடத்துவதற்குச் சரியான சம்பளத்தை ஒருவர் பெற வேண்டும் என்று நாம் நினைத்தோம். அதற்கு வழிவகுக்கும் விதத்தில் ஐந்து விசேட திட்டங்களை ஆரம்பித்தோம்.

"30 ஆண்டுகளில் நிறைவேற்றப்படவிருந்த மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை ஆறு ஆண்டுகளில் பூர்த்தி செய்து, இதன் மூலம் பத்து லட்சம் பேருக்கு வேலை வழங்கவும், பத்து லட்சம் ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனுடன் நீர் மின்விசையை இருமடங்காக்கவும், உணவில் சுயதேவைப் பூர்த்திபெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சுதந்திர வர்த்தக வலயத்தை ஆரம்பிப்பதன் மூலம் வெளிச் செலாவணியைச் சம்பாதிக்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேநேரத்தில் கொழும்பு மாநகரைச் சுற்றியுள்ள நகர அபிவிருத்தி வேலைத் திட்டங்களைத் துரிதமாக்கி, குடியேற்றத்திட்டங்களை ஆரம்பிக்கவும், சேரிகளை அகற்றவும் திட்டங்கள் வரையப்பட்டுள்ளன. மாவட்ட அமைச்சர்களை நியமிப்பதன் மூலம் இலங்கை பூராவும் அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

### அன்றும் இன்றும்!

"ஆறு மாதங்களுக்கு முன்னர் நான், மக்கள் தெரிவு செய்த அரசாங்கத்தின் பிரதமராக இங்கு வந்திருந்தேன். இன்று அரசின் பிரதமராகவோ அன்றி அரசாங்கத்தின் தலைவனாகவோ மட்டுமின்றி, நாட்டின் தலைவனாக உங்கள்முன் நான் நிற்கின்றேன். இலங்கையில் இதுவரை எவருமே வகித்திருக்காத பதவியை நீங்கள் எனக்கு வழங்கியிருக்கிறீர்கள். மக்கள் தெரிவுசெய்த, மக்கள் ஜனாதிபதியாக இங்கு வந்துள்ளேன். இந்த நாட்டின் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனக்கு மக்கள் அளித்திருக்கும் இப்பெரும் பொறுப்பை, நேர்மையுடனும் அரசியல் அமைப்புக் கிணங்கவும் நிறைவேற்றுவேன் என்பதை உறுதியுடன் உங்களுக்குக் கூறிவைக்கின்றேன்.

### 'மக்கள் தலைவன்'

'நான் ஐ தே கட்சித் தலைவன் மட்டுமல்ல; இந்த நாட்டின் ஒரு கோடியே 40லட்சம் மக்களின் தலைவன். மக்களின் பிரச்னைகளை விரைவாகத் தீர்த்துவைக்கவேண்டியது என் மீதுள்ள பொறுப்பு.

'நாட்டு மக்கள் முறையான வாழ்க்கையை நடத்த சந்தர்ப்பம் அளிப்பேன். சகல மக்களும் சுதந்திரமாக, சுபிட்சமாக வாழ நான் பாடுபடுவேன். எல்லா மக்களும் ஐக்கியத்தைப் பேணிப் பாதுகாத்து ஒரு கொடியின்கீழ் செயல்பட சந்தர்ப்பம் அளிக்கப்படும். சகல மக்களும் மகிழ்ச்சியுடன் வாழ்க்கையை நடத்த, தகுந்த பொருளாதாரச் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### ஒரேமக்கள் ஒரேநாடு

"இந்த நாட்டில் எல்லோருமே ஒரே மக்களாக வாழ சந்தர்ப்பம் அளிக்கப்படும் அதே நேரத்தில்; இந்த நாட்டிற்குள் பல நாடுகள் உருவாகி, பிரிப்பதற்கு அனுமதி கிடையாது. எல்லா பிரஜைகளுக்குமே இந்த நாடு சொந்தமானது.

"ஒருநாட்டை பிரபலமாக்க செல்வம் மிகுந்ததாக மாற்ற; ஜனாதிபதியினாலோ அல்லது அரசாங்கத்தினாலோ மட்டும் முடியாது. நல்ல திட்டங்களை நிறைவேற்றி நாட்டை முன்னேற்ற நாட்டுமக்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். நமது நாட்டில் பொருளாதார மாற்றம் ஏற்படவேண்டும்.

"இதற்காக சூழல் மாறும் வரை நாம் காத்திருக்கத் தேவையில்லை. சூழலை மாற்றியாக வேண்டும்.

### "பழிவாங்கும் எண்ணம் இல்லை"

"அரசியல் பழிவாங்கும் எண்ணம் எமக்கு இல்லை. இந்த அரசாங்கம் எல்லாமக்களுக்கும் சொந்தமானது.

"புத்தர்பெருமான் சொன்னதுபோல, உயர்சாதியும் தாழ்ந்தசாதியும் பிறப்பினால் வருவதுகிடையாது. ஒருவரின் நடத்தையினாலேதான் இது ஏற்படுகிறது. நாட்டைக் கட்டி எழுப்புவோம் என்றநல்லஎண்

]3ம் கலம் பார்க்க]

## சன்சோனி கமிஷன்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

### முல்லைத்தீவு, மன்னார்

15ம்திகதி முல்லைத்தீவிலும், 26ம்திகதிமன்னாரிலும்நிகழ்ந்த சம்பவங்கள் பற்றி கமிஷன் முன் ஆஜராக்கப்படும்.

### அனுராதபுரம்

17ம், 18ம் திகதிகளில் அனுராதபுரம் மற்றும் அனுராதபுரச் சுற்றுடல்களில் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்கவிரும்புகிறவர்களின் சாட்சியங்கள் ஆஜர் செய்யப்படும்.

### கமிஷனின் சமன்ஸ்

விசாரணைக்கமிஷன் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுச் சபையால் நேரடியாகச் சாட்சியமளிக்கவென தெரிவுசெய்யப்பட்ட சாட்சிகளுக்கு அழைப்பாணைகளை அனுப்பியுள்ளது. ஆயினும் அழைப்பாணை கிடைக்காதவர்களும் விரும்பினால் தமிழர்புனர்வாழ்வுக்கழகத்துடன் தொடர்புகொண்டு தங்கள் சாட்சியங்களை அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக விரும்புகிறவர்கள் காலதாமதமின்றி உடன் தங்களுடன் தொடர்புகொள்ளுமாறு சட்டத்தரணி செ. இரவீந்திரன் கேட்டுள்ளார்.

அகதிகள் புனர்வாழ்வுச் சங்கத்தின் சார்பாக பின்வரும் சட்டத்தரணிகள் ஆணைக்குழுமுன் சட்டத்தரணி செ. இரவீந்திரனின் அனுசரணையுடன் ஆஜராக உள்ளனர்.

சாம் ஜே. கதிர்காமர் கியூ. சி., முன்னாள் செனட்டர் த நடராசா சட்டத்தரணி, சட்டத்தரணிகள் விஸ்வநாதன், கே சண்முகலிங்கம், லெஸ்லியாத்லெட், கே தேவராசா, அண்டர்வுட் மாணிக்கவாசகர், செ சந்திரகாசன், செ சக்கரதாரன், மஞே தேவசகாயம், சிவராஜசிங்கம், திருமதி சாந்தினி ஞானகரன், செ புதுமைநாயகம், ஐ கேதீஸ்வரன், எஸ் சிற்றம்பலம் செ சோமசுந்தரம், ஏ பி நைல்ஸ், சோ. மண்டலேஸ்வரன், மகேந்திரன் செல்லதம்பு, ராஜன் செல்லதம்பு.

மேலும் தமிழ்ச்சங்க சம்மேளனத்தின் சார்பில் சட்டத்தரணி இரவீந்திரனின் அனுசரணையுடன் திரு பீ நவரட்ணராஜா கியூ சி, செல்வி பாஸ்கரி முதலியார் சட்டத்தரணி, செல்வி பற்றிமா ஆரோக்கியசாமி சட்டத்தரணி திரு மு கருணாகரன் ஆகியோரும் ஆஜராக உள்ளனர். இத் தகவல்களை தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் சார்பில் சட்டத்தரணி செ. இரவீந்திரன் நமது நிருபருக்கு தெரிவித்தார்.

### தொண்டமான் கண்டியில் சாட்சியம்

இ. தொ. காங்கிரஸ் தலைவரும், நுவரெலிய மஸ்கெலிய 3-வது எம். பியுமான திரு. எஸ். தொண்டமான் கண்டியில் சாட்சியமளிக்க விரும்புவதாகவும், ஆயினும் யாழ்ப்பாணத்தில் இலங்கை தொழிலாளர்காங்கிரஸ் சார்பில் சட்டத்தரணிகள் சொக்ஸி, ருத்திரமூர்த்தி ஆகியோர் ஆஜராவர்கள் என்றும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (கி)

## உப்பள இடமாற்றங்கள்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு உப்பளத்தில் கடமையாற்றிய திரு. ரி. இறிசுப்பிரமணியம் செம்மணி உப்பளத்துக்கு பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

செம்மணி உப்பளத்தைச் சேர்ந்த திரு எஸ் றெட்றிக்கஸ் மன்னாருக்கும் ஆனையிறவு உப்பளத்தைச் சேர்ந்த திரு பி சுந்தரராமலிங்கம் பூன்தல உப்பளத்துக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

திரு ஜே ஜோக்கிம்பிள்ளையும் திரு கே குலசேகரமும் முறையே குறிஞ்சாத்தீவுக்கும், ஆனையிறவுக்கும் உற்பத்தி முகாமையாளர்களாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## சகல..

[5ம் கலத் தொடர்ச்சி]

ணம் நாட்டு மக்களுக்கு வரவேண்டும். இதன் மூலம் உலகிலேயே ஜனநாயக சுதந்திரத்தை ஸ்திரப்படுத்திய ஒரு பெரிய நாடு இலங்கை என்ற கௌரவத்தைப் பெறுவோம். இன்று அரசுமேற்கொண்டுள்ள நல்ல திட்டங்கள் அடுத்த சில ஆண்டுக்குள்ளேயே நன்மை தரத் தொடங்கிவிடும். இந்த இலக்கை அடைய, பூரண ஒத்துழைப்பை மக்கள், அரசாங்கத்துக்கு நல்கவேண்டும்"

## மரண அறிவித்தல்

### C. M. குலசிங்கம்

யாழ்ப்பாணம் 96 அரசடி வீதியைச் சேர்ந்த திரு. C. M. குலசிங்கம் (இளைப்பாறிய இரசாயன ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி) காலமாகிவிட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற குலேந்திரராசா, தனகுலராயன், பவானி ஆகியோரின் தந்தையும்; அன்னலட்சுமி, ராஜேஸ்வரி, காலஞ் சென்ற சிவதாசன் ஆகியோரின் மாமனாரும், நந்தினி ஷைலஜா, தனுஜா, நிரஞ்சனா, சுமதி, ஜனனி, சதீஷ்குமார், உமாகாந்தன் ஆகியோரின் பேரனும் ஷங்கபிருத், சிவாத்மிகா ஆகியோரின் பூட்டனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரிகைகளுக்காக அன்னாரது இல்லத்திலிருந்து இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 8428

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.